# புனித வளனார் திருவிழா
## முதல் நாள் 16.03.2021

### இறைத்திட்டத்தை கடமையோடு செய்து முடித்த
### செயல் வீரர் புனித சூசையப்பர்

முன்னுரை

வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம்தான்:
கடமையைச் செய்தால் வெற்றி
கடமைக்குச் செய்தால் தோல்வி (கவிஞர் கண்ணதாசன்)

நமது புனிதர் சூசையப்பர் இறைத்திட்டத்தை தன் வாழ்வில் கடமையாக கொண்டு அதில் வெற்றி பெற்றார். அனைவராலும் விரும்பும் புனிதரானார். மரியா கருவுற்று இருப்பதைக் கண்டு அவரை மறைவாக விலக்க திட்டமிட்டார். ஆனால் மரியாவை ஏற்றுக்கொள் என வானதூதர் உரைத்ததை ஏற்று மரியாவை திருமணம் செய்து கொள்கிறார், இறைதிட்டத்தை நிறைவேற்றினார்.

பாலன் இயேசுவை கொல்ல ஏரோது அரசன் தேடுகிறான் என கனவில் எச்சரிக்கப்பட்டதை அடுத்து இரவோடு இரவாக மரியன்னையையும் பாலன் இயேசுவையும் பாதுகாப்பாக எகிப்துக்கு கூட்டி சென்று, இறைத்திட்டத்தை செவ்வனே நிறைவேற்றினார்.

இயேசுவை அறிவிலும் ஞானத்திலும் உடல் வலிமையிலும் வளர்த்தெடுக்கிறார். தன் மகனை காணவில்லை என்றதும் அவரை தேடி ஓடுகிறார். ஒரு தந்தையாக தன் கடமையை சரியாக செய்து தனக்கென இறைவன் தீட்டிய திட்டத்தை நிறைவேற்றினார்.

எனவே, புனித சூசையப்பரைப் போல நாமும் இறைத்திட்டத்தை நிறைவேற்ற தேவையான அருளை வேண்டி இந்த செப வழிபாட்டில் சிறப்பாக மன்றாடுவோம்.

பாடல்: புனித சூசையப்பர் பாடல் அல்லது வீடியோ

வாசகம் 1: மத்தேயு 1: 18-25

திருப்பாடல்: திருப்பாடல் : 1 (பாடலாம் அல்லது வாசிக்கலாம்)
இறை அலைகள்: பாடல் எண் (137)
ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்

வாசகம் 2: இறைத்திட்டத்தை செய்துமுடித்த செயல் வீரர் புனித சூசையப்பர்
(Youtube talk by Fr. Victor Armstrong – தேடல் மீடியா)

‘‘யோசேப்பு’’ விவிலியத்தில் மிக சுருக்கமாக சொல்லப்படுகின்ற ஒரு மனிதர். ஆனால் இன்று அவர் பெயரால் ஏராளமான பள்ளிகள் மற்றும் நிறுவனங்கள் இருப்பதை நாம் காண்கிறோம். யார் இந்த யோசேப்பு? விவிலியத்தில் மத்தேயு 1:16 ல் யாக்கோபின் மகன், மரியாவின் கணவர் யோசேப்பு என்று செல்லப்படுகிறது. மேலும் மத்தேயு 1:19ல் அவர் ஒரு நேர்மையாளர், இதை தவிர்த்து மத்தேயு 13:55ல் அவர் தொழில் தச்சுத் தொழில் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவரைப்பற்றி மிக சுருக்கமாகவே விவிலியத்தில் நாம் காண்கிறோம். ஆனால் இவர் மிகப் பெரிய செயல் வீரராகவும் இருப்பதை நாம் விவிலியத்தில் வாசிக்கிறோம். எனவே தான் கடவுள் தன் ஒரே மகனை வளர்க்கக் கூடிய மிகப் பெரும் பேற்றினை புனித சூசையப்பரிடம் ஒப்படைத்தார்.

தந்தையாகிய கடவுள் தேர்ந்தெடுத்த அன்னை மரியாவை பாதுகாக்கும் மிக பெரிய பொறுப்பையும் இவரிடம் ஒப்படைத்தார். இவர் ஒரு வார்த்தை கூட பேசியதாக விவிலியத்தில் குறிக்கப்படவில்லை. ஆனால் ஒரு மிக பெரிய செயல் வீரராக கடவுள் தனக்கு கட்டளையிட்டதை நிறைவேற்றியவர்.

மத்தேயு 1 மற்றும் 2-ம் அதிகாரத்தில் அவர் கண்ட நான்கு காட்சிகளில் கடவுளின் தூதர் அவரோடு பேசுகிறார்:

1. மரியாவை ஏற்றுக்கொள்ள ஆண்டவரின் தூதர் அவரை அறிவுறுத்துகிறார்
2. மரியாவையும் குழந்தையையும் எடுத்துக்கொண்டு எகிப்துக்கு தப்பியோட அறிவுறுத்தப்படுகிறார்.
3. எகிப்திலிருந்து இஸ்ரயேலுக்கு திரும்பி செல்லவும்
4. நாசரேத்துக்கு செல்லவும் அறிவுறுத்தப்படுகிறார்.

இந்த நான்கு இறைத்திட்டத்தையும் இறைவனுக்கு கீழ்ப்படிந்து அதன்படி செயலாற்றுகிறார். காணாமல் போன இயேசுவை கோவிலில் கண்டெடுத்த நிகழ்விலும் யோசேப்பு எதுவும் பேசாமல் தன்னை இறைவனிடம் தாழ்த்தி கொள்கிறார். இவ்வாறாக தன் வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கு பணிந்து வாழ்கிறார்.

சூசையப்பர் ஆபிரகாமைப் போல இறைவன் சொன்னதை முழுமையாக நம்பிய ஒரு நம்பிக்கையின் மனிதர். பழைய ஏற்பாடு யாக்கோபைப் போல பொறுமையும், தாவீதைப் போல செயல் வீரராகவும் விளங்கியவர். திருத்தந்தை பிரான்சிஸ் ‘‘மரியாவைப் போல நம்பிக்கையாளர்களாகவும், யோசேப்பைப் போல செயல் வீரராகவும் இருக்க நம் எல்லோரையும் அழைக்கிறார்.

ஆம், புனித சூசையப்பர் தன் வாழ்நாள் முழுவதும் இறைவனின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, மிகவும் கீழ்ப்படிதலுடன் அதை செயலாற்றி, இறைத்திட்டம் இவ்வுலகில் நிறைவு பெற மிகப் பெரிய துணை புரிந்தவர். நாமும் புனித சூசையப்பரைப் போல இறைவனின் திட்டத்திற்கு அடிபணிந்து, செயல் வீரர்களாக,

நமது கடமைகளை பொறுமையுடனும் பணிவுடனும் இறைவனின் விருப்பத்தோடு செயல்படுத்த புனித யோசேப்பின் பரிந்துரையை வேண்டி சிறப்பாக செபிப்போம்.

## மன்றாட்டுக்கள்

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

1. அன்பு தந்தையே இறைவா! உம் அடியாளர்களாகிய திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவற நிலையில் உள்ள அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் தங்களுக்கு இறைவன் கொடுத்த இறைத்திட்டத்திற்கு ஏற்ப வாழவும், செயல்படவும் தேவையான அருளை வேண்டி புனித சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணைக்கடலே இறைவா! கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே என்ற கூற்றின் படி எங்கள் அரசியல் தலைவர்கள் மக்கள் பணியை இறை பணியாக ஏற்று சுயநலம் தவிர்த்து, பொதுநலத்துடன் மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் மனதை தந்தருள வேண்டி புனித சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அறிவின் ஊற்றே எம் இறைவா! படிக்கும் மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்காக வேண்டுகிறோம். அவர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து, உலக நாட்டங்களில் தங்களையே சிதைத்து விடாமல், இறை பயத்தோடு இறைவன் பிள்ளைகளாக வாழ அவர்களுக்கு வரம் தர வேண்டி புனித சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாக்கும் பரமனே எம் இறைவா! பெற்றோர்களுக்காகவும், பெரியோர்களுக்காகவும் மன்றாடுகிறோம். அவர்கள் தங்கள் குடும்ப வாழ்வில் புனித சூசையப்பரைப் போல தங்கள் பொறுப்புக்களை பொறுமையுடனும் இறைவன் துணையோடும் செயல்படுத்த தேவையான வரம் வேண்டி புனித சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## நவநாள் செபம்:

ஓ! புனித சூசையப்பரே, உம்முடைய பாதுகாப்பு மிகவும் உயர்ந்தது மற்றும் வலிமையானது. கடவுளின் அரியணையின் முன்பு எமக்காக பரிந்து பேசுபவரே, உம்மிடம் என் அனைத்து வேண்டுதல்களையும் அர்ப்பணிக்கிறேன்.

ஓ! புனித சூசையப்பரே, உம்முடைய பரிந்துரையால் என்னை வழிநடத்தும். உம்முடைய அன்பு மகனிடமிருந்து எனக்குத் தேவையான ஆன்மீக அருள் உதவிகளை பெற்றுத்தாரும். அதனால் உமது இறை வல்லமையின் உதவியினால், எனது நன்றிகளையும் வணக்கத்தையும் ஆராதனையையும் தந்தையாம் கடவுளுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஓ! புனித சூசையப்பரே, இறைமகன் இயேசுவை துயில் கொள்ளும் போது மார்போடு அணைத்தவரே, எனது பெயரால் இயேசுவின் தலையில் முத்தமிடும், அந்த முத்தத்தை நான் இறக்கும் தருவாயில் இருக்கும் போது எனது நெற்றியில் முத்தமிடும்படி உம் அன்பு மகனிடம் பரிந்து பேசுவீராக. –ஆமென்.

விண்ணுலகில் இருக்கிற செபம்

சூசையப்பர் பாடல்:

இறை அலைகள்: பாடல் எண் 830

மாநிலம் போற்றிடும் மாவளனே
திருமாமரி காவலனே-2
புனிதருள் முதல்வனே புகழ் சுமந்த -2
முனிவரனே உம் பதம் பணிந்தோம் -2

1. உழைப்பதன் வருத்தம் நீங்கியதோ
இறைவன் கையில் தவழ்வதனால் (2)
மலை போல் எழும் துயர் வாழ்வினிலே -2
மறைந்ததுவே தாய்மரி துணையால்

2. இறைவனின் பணிகள் செய்வதற்கு
இரவும் நண் பகலும் உமக்கு
மறைதரும் அருள்மொழி பெறுவதற்கு -2
மனத்திடம் தா உன் அடியவர்க்கு

# புனித வளனார் திருவிழா

## இரண்டாம் நாள்

## தொழிலாளர்களின் பாதுகாவலர்

---

முன்னுரை:

> உழைப்பின் சக்தியே மிக உன்னதமானது - அதை
> வெற்றிக்கொள்ளும் ஆற்றல் - வேறெந்த
> சக்திக்கும் கிடையாது (- அபிரகாம் லிங்கன்)

உழைப்பைப் பற்றி பேசும் போது தவிர்க்க முடியாத ஒரு பெயர், புனித சூசையப்பர். திருத்தந்தை பிரான்சிஸ் 2013-ம் ஆண்டு மே 1-ம் தேதி ஆற்றிய சொற்பொழிவில் இவ்வாறு கூறுகிறார். யோசேப்பு ஒரு தன்னிகரற்ற உழைப்பாளி. செய்யும் தொழிலின் மகத்துவத்தை இவ்வுலகிற்கு கற்பிக்கிறார். பணிகள் கடவுள் இவ்வுலகிற்கு வகுத்த திட்டத்தின் ஒரு பகுதி. யோசேப்பு இறைவன் தன்னை கைவிடமாட்டார் என்பதை முழுமையாக நம்பினார். அதற்கான பலனை கடவுள் அவருக்கு அளித்தார்.

புனித சூசையப்பர் விவிலியத்தில் பேசியதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை ஆனால் அவரது நற்செயல்கள் இன்றளவும் பலராலும் பேசப்படுகிறது. உழைப்பாளர்களால் தான் இந்த உலகம் இன்னும் அழகாக இயங்கி கொண்டு வருகிறது. இறைவன் ஆறு நாட்கள் படைப்பின் பணியை முடித்து ஓய்வெடுத்தார், இன்றளவும் அவர் உருவாக்கிய படைப்பை தம் உழைப்பின் மூலம் மெருகேற்றி கொண்டிருக்கிறார்கள் அவர் படைத்த மணிமகுடமான உழைப்பாளர்கள்.

இப்படிப்பட்ட தொழிலாளர்களின் பாதுகாவலர் தான் புனித சூசையப்பர். எனவே இன்றைய இரண்டாம் நாள் வழிபாட்டில் புனித சூசையப்பரைப் போல சிறந்த உழைப்பாளர்களாக வாழ, இறைவன் நமக்கு கொடுத்த பணியை இறை நம்பிக்கையோடு செய்து இறை ஆசீரை பெற மன்றாடுவோம்.

பாடல்: புனித சூசையப்பர் பாடல் அல்லது வீடியோ

வாசகம் 1: மத்தேயு 2: 13-15, 19-23.

திருப்பாடல்: திருப்பாடல் : 42 (பாடலாம் அல்லது வாசிக்கலாம்)
இறை அலைகள்: பாடல் எண் (190)
கலை மான்கள் நீரோடைத் தேடும்

வாசகம் 2: புனித சூசையப்பர், தொழிலாளர்களின் பாதுகாவலர்

(Youtube talk by Fr. Babiston – தேடல் மீடியா)

புனித யோசேப்பு, ஒரு தச்சு தொழில் செய்தவர். தினசரி தன்னுடைய வேலைகளை செய்து தன் குடும்பத்தை வழிநடத்தியவர். எனவே தான் இவர் தொழிலாளர்களுக்கு மிகவும் நெருக்கமுடைய புனிதராக கருதப்படுகிறார்.

திருத்தந்தை 15-ம் பெனடிக்ட் சூசையப்பரை சிறந்த வழிகாட்டியாக கொண்டு பின்பற்ற வேண்டுமென கூறினார். அதன்பிறகு 1955, மே 1-ம் தேதி புனித யோசேப்பு தொழிலாளர்களின் பாதுகாவலர் என திருத்தந்தை 12-ம் பயஸ் அதிகாரப்பூர்வமாக அறிக்கையிட்டார். அதிலிருந்து சூசையப்பரை தொழிலாளர்களின் பாதுகாவலர் என்று கொண்டாடி வருகிறோம்.

தொழிலாளர் சூசையப்பர் நமக்கு விடுக்கும் அழைப்பு என்ன? நமக்கு தெரிந்தது போலவே இவர் மிகவும் அமைதியானவர். எந்த இடத்திலும் இவரது வார்த்தைகள் மேலோங்கி இருப்பதையோ அல்லது இவர் பேசிய வார்த்தைகளையோ நாம் விவிலியத்தில் எங்குமே பார்க்க முடியாது.

பொதுவாகவே அமைதியாக இருப்பவர்கள் மகிழ்ச்சியை கொண்டிருப்பவர்கள், மன்னிக்கக் கூடியவர்கள், தங்களது வேலையை சிறப்பாக செய்பவர்களாக இருக்கிறார்கள். தொடக்கத்தில் இறைவன், மனிதர்கள் தவறு செய்த போது அவர்களை மன்னித்து அவர்களை மீண்டும் ஆசீர்வதித்தார். அதே போல் தொடர்ந்து மக்கள் பாவம் செய்து அவரை விட்டு விலகி சென்ற போதெல்லாம், கடவுள் மீண்டும் மீண்டும் அவர்களை ஆசீர்வதித்து தன் உறவை அவர்களோடு புதுபித்து கொள்கிறார். தன் மக்கள் செய்த அனைத்து பாவங்களையும் பொறுமை காத்து, அவர்களை மன்னித்து, மீண்டும் வாய்ப்பு கொடுக்கிறார். இதனால் தான் பொறுமையாக அமைதியாக இருப்பவர்கள் கடவுள் பார்வையில் அதிக பேறு பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

இதற்கு புனித சூசையப்பர் மிகச் சிறந்த ஒரு எடுத்துக்காட்டு. இவர் அமைதியான முறையில் இறைவனின் திட்டத்தை தன் வாழ்வில், எதையும் பேசாமல் அமைதியாக வாழ்ந்து காட்டினார். இவர் அமைதியாக இருந்தாலும் தன்னுடைய் அமைதியால் இறைதிட்டத்திற்கு இசைந்து கடவுளின் மீது தான் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கைளை வெளிப்படுத்தினார். இவ்வாறு தன் வாழ்வில் இறை ஆசீரை நிறைவாக பெற்றவர் தான் புனித சூசையப்பர்.

“நீதிமான்“ என்ற வார்த்தைக்கு ‘கடவுளுக்கு பணிந்து நடப்பவர்’ என்பது பொருள். ஆம் இவ்வார்த்தைக்கு சிறந்த எடுத்துக்காட்டு புனித சூசையப்பர். கன்னி மரியாவின் பேறுகால வேதனையின் போது இடம் தேடி அலைந்த போதும், குழந்தை இயேசுவை ஏரோது அரசனின் பிடியில் இருந்து விடுவிக்க எகிப்துக்கு தப்பி ஓடிய போதும் பல இன்னல்களை தன்னுள்ளே அமைதியாக தாங்கி கொண்டார். இதன் வழியாக கடவுளின் மீட்பு திட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டார்.

புனித சூசையப்பர் உழைப்பின் மேன்மையைப் பறைசாற்றும் திருக்குடும்பத்தின் தலைவர், வளம் தரும் வளன். புனித சூசையப்பரின் வழியில் நாமும் நம் அன்றாட பணிகளை பொறுப்புடன் செய்து, இறைவனின் மகிமையில் மன நிறைவடைவோம்.

மன்றாட்டுக்கள்:

பதில்: உழைப்பின் மகுடமான சூசையப்பரே எங்களுக்காக வேண்டிகொள்ளும்

1. அன்பு தந்தை சூசை மாமுனியே! எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட இறை பணியை இறைவனுக்கு ஏற்ற வகையில் செய்திட, இறைவனிடம் மன்றாடுவீராக...

2. திருக்குடும்பத்தின் பாதுகாவலரான புனித சூசையப்பரே! எம் குடும்பத் தலைவர்கள் உம்மை போல அமைதியான முறையில் தங்கள் பணிகளை செய்து, குடும்பத்தை நல்முறையில் வழிநடத்திட, இறைவனிடம் மன்றாடுவீராக...

3. இறைமகன் இயேசுவின் வளர்ப்பு தந்தையே! எல்லா சிறுவர் சிறுமியர், இளையோர் இளம்பெண்கள் அனைவரும் குழந்தை இயேசுவைப் போல் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து, இறை ஞானத்தில் வளர, இறைவனிடம் மன்றாடுவீராக...

4. உழைப்பின் மகுடமான சூசை முனியே! இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும், இறை அழைப்பை ஏற்று, இறைபணிக்கு எங்களால் இயன்ற முயற்சிகளை செய்யவும், எல்லா சூழ்நிலையிலும் நம்பிக்கையில் நிலைத்திருக்கவும், இறைவனிடம் மன்றாடுவீராக...

நவநாள் செபம்:

ஓ! புனித சூசையப்பரே, உம்முடைய பாதுகாப்பு மிகவும் உயர்ந்தது மற்றும் வலிமையானது. கடவுளின் அரியணையின் முன்பு எமக்காக பரிந்து பேசுபவரே, உம்மிடம் என் அனைத்து வேண்டுதல்களையும் அர்ப்பணிக்கிறேன்.

ஓ! புனித சூசையப்பரே, உம்முடைய பரிந்துரையால் என்னை வழிநடத்தும். உம்முடைய அன்பு மகனிடமிருந்து எனக்கு தேவையான ஆன்மீக அருள் உதவிகளைப் பெற்றுத்தாரும். அதனால் உமது இறைவல்லமையின் உதவியினால், எனது நன்றிகளையும் வணக்கத்தையும் ஆராதனையையும் தந்தையாம் கடவுளுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஓ! புனித சூசையப்பரே, இறை மகன் இயேசுவை துயில் கொள்ளும் போது மார்போடு அணைத்தவரே, எனது பெயரால் இயேசுவின் தலையில் முத்தமிடும், அந்த

முத்தத்தை நான் இறக்கும் தருவாயில் இருக்கும் போது எனது நெற்றியல் முத்தமிடும்படி உம் அன்பு மகனிடம் பரிந்து பேசுவீராக. –ஆமென்.

விண்ணுலகில் இருக்கிற செபம்

சூசையப்பர் பாடல்:

இறைஅலைகள்: பாடல் எண் 829

மதுமலர் நிறைகொடி கையிலேந்தும்
மாட்சிமை நிறை சூசை மாமுனியே
துதி வளர் உமது நற்பதம் வந்தோம்
துணைசெய் தெம்மையாளும் தாதையரே

1. வான் உலகிழந்ததால் கர்வமுற்ற
வன் மனக்கூளியின் வலையறுக்க
தான் மனுவாய் உதித்த கடவுள்
தாதையாம் சூசை உன் தஞ்சம் வந்தோம்

2. ஒளி நிறை கதிரோனை ஆடை எனும்
உடுவதைத் தலையிலும் முடி புனைந்த
துளி நிகர் அருள் பொழி மாமரியாள்
துணைவனாம் சூசை உன் துணை புரிவாய்

3. தூதர் வானோர்க்கு மேலாய் உயர்ந்து
துலங்கும் சிம்மாசனந் தனிலிருந்து
ஆதிரையோரைக் கண் பார்த்துனது
ஆசியை அளித்தருள் மாதவனே

# புனித வளனார் திருவிழா
## மூன்றாம் நாள்

### தூய யோசேப்பு
### திரு அவையின் பாதுகாவலர்

முன்னுரை:

புண்ணைக் காக்கும ருந்தினைப் போன்றுளொய்
கண்ணைக் காக்குமி மைக்கிணை காதலான்
மண்ணைக் காக்கெனை மண்ணடைக் காத்தலால்
விண்ணைக் காக்கர சாகவி ளங்குலாய்
ஒழிவ ருத்தவ தாவிதற் கோதிய
மொழிவரும்படி முற்றுலன் கோத்திர
வழிவ ருஞ்சுத னீமணும் வானமு
மழிவ ருஞ்தக வோடர சாளுவாய்

\- தேம்பாவணி

காயத்தை ஆற்றும் மருந்து போல, கண்ணைக் காக்கும் இமையைப் போல, இவ்வுலகத்தை மீட்ட இறைவனையே பாதுகாத்து பராமரித்தவர் புனித யோசேப்பு. அழியாத புகழோடு பிறந்த புனித யோசேப்பு விண்ணுலகையும், மண்ணுகையும் காவல் புரிந்து பாதுகாக்கிறார் என்ற கருத்தை தேம்பாவணி நூலில் உள்ள பாடல்கள் வாயிலாக வீரமாமுனிவர் புனித யோசேப்பு எவ்வாறு இறைவன் இயேசுவை பாதுகாத்தார் என எடுத்தெய்ம்புகிறார்.

புனித யோசேப்பு தன் குடும்பத்தை கண்ணின் மணிபோல பாதுகாத்தார், எதிர் வந்த எல்லா ஆபத்துகளையும் கடவுளின் துணை கொண்டு எதிர்த்து போராடினார். இல்லற வாழ்வை தேர்தெடுக்கும் நபர்களுக்கு தேவையான அருளையும், துறவர வாழ்வை தேர்தெடுக்கும் நபர்களுக்கு தேவையான அருளையும் இறைவன் அவர்கள் தேர்ந்தெடுக்கும் வாழ்கைக்கு ஏற்ப அளிக்கிறார். ஆனால் இல்லறம் மற்றும் துறவறம் இரண்டிலும் உள்ள அருள் வளங்களை முழுமையாக பெற்றவர் புனித யோசேப்பு என புனித தாமஸ் அக்குவினாஸ் கூறுகிறார்.

எல்லாவிதமான அருள் வளங்களையும் பெற்று திருக்குடும்பத்தை பாதுகாத்த புனித யோசேப்பு இன்று தன் மகன் ஏற்படுத்திய திருஅவையையும் கண்ணின் மணியாய் காத்து வழி நடத்துகிறார். எனவே, இந்நன்நாளில் புனித யோசேப்பைப் போல் நேர்மை, உண்மை, கடின உழைப்பு, இரக்கம் போன்ற குணங்களை நாம் பெற்றிடவும், திருஅவையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் தங்களின் பாதுகாவலர் புனித யோசேப்பைப் பின்பற்ற தேவையான அருளை வேண்டி இவ்வழிப்பாட்டில் பங்கெடுப்போம்.

பாடல்: புனித சூசையப்பர் பாடல் அல்லது வீடியோ

வாசகம் 1: லூக்கா 2: 41-52

திருப்பாடல்: திருப்பாடல் : 86 (பாடலாம் அல்லது வாசிக்கலாம்)
ஆண்டவரே வானளவு உயர்ந்துள்ளது
https://www.youtube.com/watch?v=pSJyrl1cwYo

வாசகம் 2: திருஅவையின் பாதுகாவலர் தூய யோசேப்பு
(Reflection by Fr. Maria Antony - Palayamkottai)

ஆழ்ந்த அமைதியில், ஆழ்ந்த இறைச்செய்தியைக் கேட்டு, சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்று, அமைதியில் பணிந்து நடப்பதுவே அழகு. தூய யோசேப்பு இதனையே தன் வாழ்வில் தெளிவுபடுத்தினார். இறுதியில் பணிந்த மனதுடன் இறைத் திருவுளத்தை ஏற்று, அதை தன் வாழ்நாள் முழவதும் கடைபிடித்தார். எனவே தான் கடவுள் அவரை தன் ஒரே மகனின் வளர்ப்பு தந்தையாகவும், திருஅவையின் பாதுகாவலர் என்ற உயர்ந்த நிலைக்கும் உயர்த்தியுள்ளார்.

அவர் வெறுமெனே கடவுளின் திட்டத்தை மட்டும் தன் வாழ்வில் செயல்படுத்தவில்லை, நல்ல ஒரு தந்தையாகவும், கணவராகவும் தன் குடும்பத்தில் வாழ்ந்தவர். இன்றைக்கு ஒரு சாதாரண குற்றத்திற்காக தங்களுடைய மனைவியை விவாகரத்து செய்யும் கணவன்மார்களுக்கு மத்தியில், யோசேப்பு தனக்கு திருமண ஒப்பந்தம் செய்திருந்த மரியா திருமணத்துக்கு முன்பாகவே கருவுற்றிருந்தது தெரியவந்ததும் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்கவில்லை. மரியா தனக்கு துரோகம் செய்துவிட்டாள் என நினைத்து அவரை கல்லால் எறிந்து கொன்றிருக்கலாம். அனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மாறாக வானதூதர் நிகழ்ந்தவற்றையெல்லாம் சொன்ன போது, நம்பிக்கையோடு அவரை ஏற்றுக்கொண்டார்.

இந்த விழாவே மரியாவின் கணவர் யோசேப்பு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இன்னாருடைய மனைவி தான் இவள் என்று அழைக்கப்படும் இந்த ஆணாதிக்க சமுதாயத்தில், யோசேப்பு மரியாளின் கணவர் என்று அறிப்படுகிறார். இது அவர் ஒரு தாழ்ச்சியுள்ள மனிதர் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

மேலும் கடவுள் அவருக்கு அளித்த மிக பெரும் பொறுப்பை, எவ்வித குறையுமின்றி மரியாவையும் குழந்தை இயேசுவையும் எல்லா இடர்களிலிருந்தும் பாதுகாத்து, தன் கடின உழைப்பால் திருக்குடும்பத்தை உருவாக்கியவர். எனவே தான் திருத்தந்தை 9-ம் பயஸ் இவரை திருஅவையின் பாதுகாவலராகவும் பிரகடனம் செய்தார். புனித யோசேப்பிடம் விளங்கிய பண்புகளை நமதாக்கி, இறைவனின் திட்டத்திற்கு செவிசாய்த்து, அதன் வழியாக இறையருள் பெறுவோம்.

மன்றாட்டுகள்:

பதில்: புனித சூசையப்பரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

1. திருக்குடும்பத்தின் பாதுகாவலரான புனித சூசையப்பரே! நீர் சிறுவயது இயேசுவை நல்வழியில் நடத்தியது போல, எங்களுக்கும் தந்தையாக இருந்து, எம் வாழ்க்கை பாதையில் எமக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டி மன்றாடுகிறோம்.

2. திருக்குடும்பத்தின் தலைவரே! தூய யோசேப்பே! எங்கள் குடும்பங்களை ஆசீர்வதியும். குடும்பத்தலைவர்கள் குடும்பத்தை நல்முறையில் வழிநடத்தவும், குடும்பத்தில் அமைதி ஒற்றுமை நிலவவும் வேண்டி மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, நீர் கூரிய வார்த்தைகள் அனைத்தையும் வேதவாக்காக கொண்டு அவற்றை போற்றி பாதுகாத்து தன் வாழ்வில் அவற்றை எவ்வித குறைவும் இன்றி நிறைவாக கடைப்பிடித்தார் புனித யோசேப்பு. அவரைப் போல துறவரத்தை மேற்கொண்டுள்ள குருக்கள், கன்னியர்கள் அனைவரும் உம் வாக்கின்படி வாழ தேவையான அருளைவேண்டி மன்றாடுகிறோம்.

4. பாதுகாக்கும் பரமனே எம் இறைவா, உழைப்பிற்க்கு முன் மாதிரியாக விளங்கும் புனித யோசேப்பைப் போன்று ஒவ்வொரு தொழிலாளர்களும் கடமைகளை சரிவர செயல்படுத்தவும் பணிபுரியும் இடங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டியும் மேலும் நீர் படைத்த இவ்வுலகை வளமான பூமியாக மாற்ற தேவையான அருளை வேண்டி மன்றாடுகிறோம்.

நவநாள் செபம்:

ஓ! புனித சூசையப்பரே, உம்முடைய பாதுகாப்பு மிகவும் உயர்ந்தது மற்றும் வலிமையானது. கடவுளின் அரியணையின் முன்பு எமக்காக பரிந்து பேசுபவரே, உம்மிடம் என் அனைத்து வேண்டுதல்களையும் அர்ப்பணிக்கிறேன்.

ஓ! புனித சூசையப்பரே, உம்முடைய பரிந்துரையால் என்னை வழிநடத்தும், உம்முடைய அன்பு மகனிடமிருந்து எனக்குத் தேவையான ஆன்மீக அருள் உதவிகளைப் பெற்றுத்தாரும். அதனால் உமது இறை வல்லமையின் உதவியினால், எனது நன்றிகளையும் வணக்கத்தையும் ஆராதனையையும் தந்தையாம் கடவுளுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஓ! புனித சூசையப்பரே, இறைமகன் இயேசுவை துயில் கொள்ளும் போது மார்போடு அணைத்தவரே, எனது பெயரால் இயேசுவின் தலையில் முத்தமிடும், அந்த முத்தத்தை நான் இறக்கும் தருவாயில் இருக்கும் போது எனது நெற்றியல் முத்தமிடும்படி உம் அன்பு மகனிடம் பரிந்து பேசுவீராக. –ஆமென்.

விண்ணுலகில் இருக்கிற செபம்

சூசையப்பர் பாடல்:

இறைஅலைகள்: பாடல் எண் 831

வான் போற்றும் மலரே சூசை முனியே
என் தெய்வத் தந்தையே என்றும்
உன் அன்பு நிலையினில் ஓயாத உழைப்பினில்
உன் பாதம் நான் தொடர்வேன்
உந்தன் வாய்மை வழியினிலே என்றும் தூய்மை லீலியே
அன்பின் சிறகினில் மகிழ்ந்து நான் வாழுவேன்

1. அறநெறி வாழ்வினில் அனைவருமே
அருளினில் அகிலமும் சிறந்திடவே
உழைப்பதன் மேன்மையை உணர்ந்திடவே
உண்மையின் நெறியினில் உயர்ந்திடவே
இறை இயேசுவை கையில் ஏந்திய
புனிதருள் முதல்வனே மாமுனியே

2. இல்லறம் நல்லறம் என விளங்க
இடர்பல ஏற்றிட துணிந்தவரே
திருமறை என்ற சுடராய் ஒளிர்ந்தவரே
இறைவனின் திருவுளம் அறிந்தவரே
இறை இயேசுவை கையில் ஏந்திய
புனிதருள் முதல்வனே மாமுனியே

இறைஅலைகள்: பாடல் எண் 826
எங்கள் காவலாம் சூசைத் தந்தையின்
மங்களங்கள் எங்கும் சொல்லி
இங்கு பாடுவோம் (2)
செங்கை அதிலே தங்க புஸ்பம்
தங்கக் கோலை ஏந்திடும் (2)

1. கன்னித் தாயாரின் பத்தா நீ அல்லோ
உன்னதமா பேறும் மாட்சி உற்ற பாக்யனே (2)
சென்னி மகுட முடி புனைந்த
மன்னர் கோத்ர மாதவா -2

2. தந்தை என்றுன்னை வந்து பாடினோம்
உந்தன் மைந்தர் சொந்தமென்று இன்று காத்திட்டாய் (2)
அந்தி காலை வந்த வேளை
வந்து உதவி தந்திடாய் - 2